[1967 ஜூன் 24

திரு. எஸ். ஆறுமுகம் : காங்கேயம் காளையை சர்வீஸுக்காக நாம் வாங்கிக் கொடுக்கிறோம். ஆறு மாத காலம் ஆகவிட்டால், அந்தக் காளைகள் சரியான முறையில் சர்வீசுக்குப் பயன்படுவதில்லை. ஆகவே, இதை மாற்றி, முர்ரா போன்ற காளைகளை வாங்கிக் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முர்ரா எருமை. (சிரிப்பு) காங்கேயம் காளை சரியாகப் பயன்படவில்லை என்றால், அதை யாரிடம் கொடுத்திருக்கிறோமோ அவர் அதற்குச் சரியான தீவனம் போடாமல் இருந்திருக்கலாம். அதனால் அது வேலை செய்யாமல் இருக்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : செயற்கை கருத்தரிக்கும் நிலையங்களில் சில சமயங்களில் காங்கேயம் மாடுகளுக்கும் சிந்துக் காளையின் விந்துகளை செலுத்துவதினால், பிறக்கும் மாடுகள் அநேகமாக ஜாதி மாறி பிறப்பதினால், ஒன்றுக்கும் லாயக்கில்லாமல் போய்விடுகிறது. காங்கேயம் மாட்டுக்கு சிந்துக் காளை போடுவதினால், மாடாகப் பிறந்தாலும் பரவாயில்லை, காளையாகப் பிறப்பதினால் பிரயோசனம் இல்லாமல் போய்விடுகிறது. இதைக் கவனித்து ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒட்டுமொத்தமாகக் குற்றம் சாட்டுவதிலே பிரயோசனமில்லை. எந்த கேந்திர நிலையங்களில் அந்த முறை கையாளப்படுகிறது என்ற தகவல் கொடுத்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. ஜார்ஜ் : கேந்திர கிராம விஸ்தரிப்பு நிலையங்களில் வெள்ளைப் பன்றி வளர்ப்பதற்கு ஏதேனும் அரசாங்கத்தினிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வெள்ளைப்பன்றி பற்றிய பிரச்சினை இப்போழுதில்லை. இது மாடுகளைப் பற்றிய பிரச்சினை.

இராமநாதபுரத்தில் கால்நடை கல்லூரி துவக்கம்

*** 69 வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் ஒரு கால் நடை கல்லூரி (Veterinary College) ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கால் நடை மருத்துவக் கல்லூரிகள் நம் மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ? வேறு எந்த இடங்களிலாவது அமைப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

1967 ஜூன் 24]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னையில் மட்டும் தான் இருக்கிறது. கனம் அங்கத்தினர் வேறு இடங்களில் திறப்பதற்கு உத்தேசம் உண்டா என்று கேட்டதற்கு இல்லை என்று பதில் சொல்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : தமிழ்நாட்டின் அடிப்படைத் தொழில் விவசாயமாக இருப்பதினால் ஜில்லாவிற்கு ஒரு வெடிரினரி காலேஜ் இருப்பது அவசியம். இனிமேலாவது ஜில்லாவிற்கு ஒரு வெடிரினரி காலேஜ் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னையில் இருக்கும் கல்லூரிக்கே போதுமான மாணவர்கள் வருவதில்லை. இப்பொழுது 300 மாணவர்கள் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். அதிலே 136 மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : சென்னையில் இருக்கக் கூடிய கால்நடை கல்லூரிக்கு அதிகம் மாணவர்கள் வருவதில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் வெளியிலிருந்து கிடைக்கக்கூடிய தகவல் என்னவென்றால் இந்த கால்நடைக் கல்லூரியில் அட்மிஷன் கிடைக்கவில்லை என்பதுதான். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மிகக் குறைந்த மார்க்கு வாங்கும் மாணவர்களும் இந்த கல்லூரிக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படியிருந்தும்கூட சுமார் 300 விண்ணப்பங்கள் தான் வந்திருக்கின்றன. 136 விண்ணப்பங்களை அதிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். எம்.பி.பி.எஸ்.-க்குத்தான் அதிக கிராக்கி இருக்கிறது. மற்றக் கல்லூரிகளில் இடம் கிடைக்காவிட்டால், இங்கேயாவது இடம் கிடைக்கட்டும் என்று சில மாணவர்கள் விண்ணப்பம் போடுகிறார்கள். சில பேர்கள் எம்.பி.பி.எஸ்.-க்கு இடம் கிடைத்தால் போய்விடுகிறார்கள். பிறகு வெய்டிங் லிஸ்டிலிருந்து ஆள் எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டைமான் : புதுக்கோட்டையில் இரண்டு அரசாங்கப் பண்ணைகள் இருக்கின்றன. அந்த இடத்தில் ஒரு வெடிரினரி காலேஜ் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி ஏற்கனவே யோசிக்கப்பட்டு அதற்காக ரூ. 5,61,800 செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. சர்க்காருடைய நிதிநிலை சரியாக இல்லையாதலாலும் போதுமான மாணவர்கள் முன்னுக்கு வராததினாலும் இப்பொழுது இந்தத் திட்டத்தைப் பற்றி யோசிக்க இடமில்லை.

திரு. ஆலடி அருணா : விலங்கினக் கல்லூரிகளை எந்த அடிப்படையில் அரசாங்கம் ஆரம்பிக்கிறது? நெல்லை மாவட்டத்தில் ஒரு புதிய கல்லூரி துவக்க திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னைக் கல்லூரிக்கே போதுமான மாணவர்கள் வரவில்லை என்று சொன்னேன். போதுமான மாணவர்கள் முன்னுக்கு வந்தால் நெல்லையில் அல்ல, வேறு எங்கு வேண்டுமானாலும் புதிய கல்லூரி திறப்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

திரு. இல. பலராமன் : இந்தக் கால்நடை கல்லூரிக்குப் படிப்பு ஆண்டு அதிகமாக இருப்பதனால் மாணவர்கள் வரவில்லை என்று பொதுவாக பிரச்சினை இருக்கிறது. அதைக் குறைக்க அரசாங்கம் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆண்டு கணக்கைப் பற்றி ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. வருவாய் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால் தான் மாணவர்கள் அதிகமாக வரவில்லை. மாட்டு ஆஸ்பத்திரி டாக்டர் தானே என்று நினைக்கிறார்கள். எம்.பி.பி.எஸ்.-க்குத்தான் அதிகமான கிராக்கி இருக்கிறது. இது ஆண்டைப் பொறுத்ததல்ல, ஊதியத்தைப் பொறுத்துத்தான்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : வெடிரினரி காலேஜில் டிகிரி கோர்ஸுக்கு ஆண்டைக் குறைத்து அதை டிப்ளமா கோர்சாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தகுதியான டாக்டர்கள் வேண்டுமானால், இப்பொழுதிருக்கிற காலம் அவசியம் என்று சர்க்கார் உணருகிறது ?

DR. H. V. HANDE : In view of the fact that there is not much demand for seats in the Veterinary College because there is not adequate number of veterinary hospitals both in the headquarters and taluks, will the Government come forward at least to increase the number of veterinary hospitals in places like Ramanathapuram?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது 267 பிளாக்குகளில் கால்நடை விஸ்தரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. அதிலே போதுமான டாக்டர்கள் பணியாற்றுவதற்கு இடம் இருக்கிறது. மீண்டும் கூடுதலாக ஆஸ்பத்திரிகள் திறக்கவேண்டுமென்றால், நிதிநிலை சரியானால்தான் செய்யப்படும்.

பஞ்சாயத்துக்கள் பயிரிடும் பழத் தோட்டங்கள்

*70 வினா—**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் துவக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பழத் தோட்டங்களை அமைப்பதிலும், தொடர்ந்து நிர்வகிப்பதிலும் ஏற்படும் அதிகமான செலவினைக் குறைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?